www.tamilarangam.net



**அறம்தான் ஆயுதங்களில் கூர்மையானது - ஆனால்**
**அது நேர்மையானது.**
**அவசரப்பட்டு ஆத்திரப்பட்டு**
**அது யாரையும் தாக்காது.**
**தாக்க ஆரம்பித்தால் தோற்காது.**

**- எம்.சி.சுப்பிரமணியம் -**

VADU இதழ் - 04 செப்ரம்பர் -2007

njhlh;GfSf;F:-
MR.THEVATHASAN
4,PLACE ROGER SALENGRO
95140 GARGES LES GONESSE
France
(E-MAIL:VADU.WORLD@hotmail.fr)

நன்கொடை-1€
சந்தா வருடம்-15€
(தபாற்செலவு உட்பட)

இலங்கை, இந்திய வாசகர்களுக்கு இலவசம்.

## எமது வாசகர்களுக்கு வணக்கங்களுடன்,

இந்த நான்காவது இதழில் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. கடந்து வந்த மூன்று இதழ்களிலும் வடு சுமந்துவந்த கருத்துக்கள், செய்திகள் போன்றவை ஏற்படுத்திய எதிரொலிகள் கணிசமானது. அவையே எம்மை, எமது வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தவேண்டியதன் அவசியத் தேவையை உணர்த்தி நிற்கின்றன.

அந்த வகையில் வடு ஊடாக உங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உறவுகளை பல வழிகளிலும் மேம்படுத்த வேண்டியதன் தார்ப்பரியத்தை வெகுவாகவே நாம் உணருகின்றோம். இன்னிலையில் எமது **தலித் சமூக மேம்பாட்டு முன்னணி** யின் முயற்சியினால் **தலித் மகாநாடு** ஒன்று நடாத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

பிரான்சில் நடைபெற இருக்கின்ற இந்த மாநாட்டில் இடம்பெறவுள்ள சந்திப்புக்கள், உரையாடல்கள், கருத்துப்பரிமாற்றங்கள்..... போன்றவை தலித் மக்களின் சமூக விடுதலை நோக்கிய பாதையில் நிச்சயம் எம் எல்லோரையும் முன்தள்ளும் என நாம் கருதுகின்றோம். புகலிட நாடுகளில் இதுவரை நடாத்தப்பட்டு வருகின்ற பலவிதமான விவாதங்கள், கூட்டங்கள், மகாநாடுகள், ஊர்வலங்கள், விழாக்கள் மற்றும் இன்னபிற அரசியல் நிகழ்வுகள் போன்ற எதிலுமே தலித் மக்களின் மீதான ஒடுக்குமுறைகள் அடக்கிவாசிக்கப்பட்டே வருகின்றமை கண்கூடு. அவுஸ்ரேலியா, ஐரோப்பா, ஸ்கன்டினேவியா போன்ற உலகின் நாலாதிசைகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் வெளிவருகின்ற போதும் இவை எதிலுமே தமிழ் சமூகத்தைப் பீடித்திருக்கின்ற சாதியம் எனும் சாபக்கேடு கண்டுகொள்ளப்படுவதே இல்லை. மாறாக ஏறக்குறைய இப்பத்திரிகைகள் எல்லாமே ஆதிக்கசாதி மனோபாவங்களை வெளிக்கொணருபவையாகவும், ஊக்குவிப்பவையாகவும் மட்டுமே இருந்துவருகின்றன.

புகலிடத்து சிறுபத்திரிகைச் சூழலும் அதுசார்ந்த இலக்கியச் சந்திப்பு, பெண்கள் சந்திப்பு மற்றும் ஒரு சில ஜனநாயக அமர்வுகள் போன்றவை மட்டுமே இவ்விடயத்தில் விதிவிலக்காக இருந்து வருகின்றன. இன்னிலையில் தலித் மக்களின் பிரச்சனைகளை தலித்துகளே முன்நின்று கூடி கலந்துரையாடுவதற்கான காலம் கனிந்திருப்பதை நடைபெறப்போகின்ற தலித் மாநாடு முன் அறிவிக்கின்றது. சாதிய ஒடுக்குமுறை குறித்து பகிரங்கமாக உரையாடுவதற்கென்று கூட்டப்படுகின்ற முதல் முதல் நிகழ்வாக இம்மாநாடு அமையப்போவது ஈழத்தமிழர்களின் புகலிட வாழ்வில் வரலாற்று சிறப்புமிக்கதொன்றாகும்.

**அந்தவகையில் வரலாற்றுச் இம்மகாநாடு சிறப்பாக நடைபெற ஒவ்வொரு தலித் மகனும்.ஃமகளும் முழு ஆதரவு தருவதோடு முன்நின்று உழைக்க வேண்டிய கடப்பாடு கொண்டவர்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அத்தோடு முற்போக்கு எண்ணம்கொண்ட சமூக விடுதலை விரும்பிகள் அனைவரும் இம்மாநாடு வெற்றிபெற தமது பங்களிப்பினை செய்ய பின்நிற்க மாட்டார்கள் என்றும் நம்புகின்றோம்.**

**(ஆ.ர்)**

**இது மாதமொருமுறை வெளியாகும் ஏடு**

www.tamilarangam.net

# தீண்டாமைக் கொடூரங்களும் தீ மூண்ட நாட்களும்

## நினைவுக்குறிப்புகள்-02 - தோழர் யோகரெட்ணம்

**1930** ஆண்டு மேற்படி சாதிய மேலாதிக்க ஒடுக்குமுறையால் சிறுபான்மை (தலித்) சமூகம் கல்விபெறுவதென்பது கடினமாக இருந்தது. இருப்பினும் சில துடிப்புள்ள துணிவான சில மாணவர்கள் கிறிஸ்தவ பாடசாலைகளில் சேர்ந்து கல்விகற்றனர். இம்மாணவர்கள் உடுவில் மான்ஸ்க் கிறிஸ்தவ பாடசாலையிலும் இளவாலை சென் ஹென்றிஸ் பாடசாலையிலும் சேர்ந்து படித்தனர். இப்படிப்படித்த சிலர் இன்றும் உயிருடன் இருக்கிறார்கள். அனேகமானவர்கள் இறந்து விட்டார்கள். எனது சிறுவயதில் எனது உறவுக்காரர்கள் தங்களின் அன்றைய துர்ப்பாக்கிய சூழலைக் கூறுவதினை நான் கேட்டிருக்கிறேன். தாங்கள் பாடசாலைக்கு செல்வதானால் புத்தகம் கொப்பிகளை ஒழித்து தானாம் கொண்டு செல்வார்களாம். (இம்மாணவர்களில் த.சரவணை, க.கந்தையா, மு.இராசேந்திரம், பொ.சின்னத்துரை, பொ.தம்பிராசா, கிருஸ்ணன்-சின்னமணி சுந்தரமூர்த்தி இவர்களை நான் அறிவேன்.) தாம் பெண்களைப் போல கூந்தலை பின்னி கட்டிக்கொண்டு பாடசாலை செல்வார்களாம். தமக்கு (முடிவெட்டும் உரிமை) சிகையலங்காரம் செய்வதில்லையாம். அப்படியான ஒரு இறுக்கமான சாதிக்கட்டமைப்பு இருந்த காலம்.

காலப்போக்கில் இவர்களின் பின் சண்டிலிப்பாய் (ராஜ.ஸ்கூல்) ஆங்கில பாடசாலையில் பலத்த இழுபறியின் பின் மு.சுந்தரமூர்த்தி என்ற மாணவன் அனுமதிக்கப்பட்டார். அதன் பின் பாடசாலைகளில் தலித் மாணவ மாணவிகள் கற்று வந்தபோதும், சில இடங்களில் மாணவ மாணவிகள் வஞ்சிக்கப்பட்டும் வந்தனர். சண்டிலிப்பாய் வாணிநிகேத வித்தியாசாலைக்கும் - சண்டிலிப்பாய் (ராஜா ஸ்கூல்) இந்துக்கல்லூரிக்கும் இடையில் பல பரீட்சை நடந்த காலம் எந்த பாடசாலை கல்வியில் உயர்ந்தது என்ற போட்டியுடன் மத, மொழி போட்டியும் நிலவியது எனலாம். தமிழ் பாடசாலையான வாணியின் தலைமை ஆசிரியராக இருந்த திரு வேலாயுதம் மாஸ்ரர் அவர்கள் ஒரு கல்வியாளர் மட்டுமல்ல முற்போக்காளரும் கூட. தலித் சமூக மாணவர்களில் திறமையானவர்கள் பொருளாதார கஸ்ரத்தால் பாடசாலை செல்லாது விட்டால், அம்மாணவர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களை பாடசாலைக்கு அழைத்துச் செல்வாராம். திரு.வேலாயுதம் அவர்களை பழைய மாணவர்கள் மிக மதிப்புடன் நினைவு செய்வார்கள். பெற்றோர்களும் அப்படியே.

இவ்விரு பாடசாலைகளுக்கும் சங்கானை, மாசியப்பிட்டி, தொட்டிலடி, கட்டுடை, போன்ற கிராமங்களிலிருந்து மாணவர்கள் சென்று படித்துவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி கல்வி கற்ற மாணவர்களில் க.பொ.த. சித்தியடைந்த தலித் சமூக மாணவர்களில் திரு.க.கந்தையா என்பவர் ஆசிரியர் தொழிலில் விருப்பங்கொண்டு அன்றைய இந்து மகாசபை யிடம் நேரடியாக விண்ணப்பித்தார். தலித் என்ற காரணத்தால் அவரின் வேண்டுதல் நிராகரிக்கப்பட்டது. திரு.கந்தையா அவர்கள் சோர்வடையவில்லை. தன்னுடன் படித்த சில தலித் சமூக மாணவர்கள் சிறு சிறு அரச உத்தியோகத்துக்கு சென்றபோதும் திரு.கந்தையா அவர்கள்பிடிவாதமாக ஆசிரியர் ஆவதில் ஆர்வமாக இருந்தார். இக்கால வேளை மேற்கூறிய தலித் மாணவர்கள் ஒரு கிறிஸ்தவ பாதிரியாரின் நட்பு காரணத்தால் வாலிபர் அமைப்பு என்று ஒரு அமைப்பை உருவாக்கி நாடகம் நடித்தனர். அந்த நாடகத்தின் பெயர் ஏழையின் புது வாழ்வு . இந்த நாடகத்தை இணுவில் காலிங்கன் சினிமா தியேட்டரில் அரங்கேற்றினர். இவ்வாலிபர்களின் எண்ணங்களில் சற்று முற்போக்கு எண்ணம் முளைவிட்டது. இக்கால கட்டத்தில்தான் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தொடர்பும் திரு.வி.பொன்னம்பலத்தின் நட்பும் இவ்வாலிபர் அமைப்புக்கு கிடைத்தது.

சிறுபான்மைத் தமிழ் மகா சபையுடன் திரு.கந்தையா, சுந்தரமூர்த்தி, சின்னத்தம்பி, இராசதுரை போன்ற அன்றைய வாலிபர்கள் மிகவும் நெருக்கமாகியதுடன் அங்கத்தவராகவும் இருந்தனர். இவர்களின் துடிப்பான தெளிவான போக்கால் வி.பி. அவர்களும் தன் கட்சி பணியை தொடரவும், மேற்கூறியவர்களை தம்முடன் இணைக்கவும் முடிந்தது. சண்டிலிப்பாயின் கம்யூனிஸ் கட்சியின் முதல் தலித் ஆதரவாளர் இவர்கள்தான். இதற்கு முன் சிவப்பு -பச்சை பெட்டி காலத்தில் சிவப்பு பெட்டி பக்கம் நின்ற தலித்துகள் அமைப்பாக அங்கத்தவர்களாக இருந்ததில்லை.

வி.பி. அவர்கள் கட்சி பணியை கிராம மட்டத்திலிருந்து ஆரம்பித்த காரணத்தால் உடுவில் தொகுதி (இன்று மானிப்பாய் தொகுதி) கணிசமான மாற்றம் கண்டது. அரசியல் ரீதியில் குறிப்பாக தலித் சமூகங்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டது. வி.பி. அவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடிவுசெய்த காலம், எனக்கு 8 அல்லது 9 வயதுதான் இருக்கும். அடிக்கடி மணிமாமா (கிருஸ்னன்), சுந்தரமூர்த்தி போன்றவர்களை சந்திக்க வரும் வி.பி தனது சிறிய மினிக்காரில் சிவப்பு கொடியுடன் வேறு சிலருடன் வருவார். நானும் என்வயது கொண்ட சிறுவர்களும் வி.பி. அவர்களின் காரை கண்டதும் காரை சூழ்ந்து கொள்வோம். எம்மை பார்த்து வி.பி சிரிப்பார். எமது தலையை தடவி ஆதரவாக அன்பு பாராட்டுவார். அவரிடம் நாம் நோட்டீஸ் வாங்கவும், அவரின் சிரித்த முகத்துடன் கூடிய சிவப்பு மையால் அச்சடிக்கப்பட்ட படம் கொண்ட சிறிய புத்தகம் (இது தேர்தல் விஞ்ஞாபனம்) சிவப்பு நட்சத்திரம் சட்டையில் குத்திக் கொள்ள வாங்குவோம். அவர்கள் அனைவரும் பிரச்சாரம் செய்ய வீடு வீடாகச் செல்லும்போது நாங்களும் பின்தொடர்வோம். எமக்கு சிவப்பு கொடிதான் விருப்பம். கொள்கை, கோட்பாடு அறியும் பருவமல்ல. ஒருநாள் வழமை போல வி.பி. குழு மணிமாமாவுடன் வீடு வீடாக வாக்கு கேட்க சென்றபோது நாமும் பின் சென்றோம். ஒரு வீட்டின் முன் கேற்றில் ஒரு சிறுவன் நின்றான். அவன் தன் தாயிடம் சொன்னான். அம்மா இவர்களை உள்ளே வரவிடவேண்டாம் என்று. அந்த சிறுவனைப்பார்த்து சிரித்த வி.பி. தம்பி ஏன் அப்படி சொல்லுகிறீர்? என்றார். (வி.பி. எவருடனும் நீங்கள் நாங்கள் என்றுதான் கதைப்பார்.) அவன் அவரின் முகத்தை பார்க்காமல் தன் தாயின் முகத்தைப்பார்த்து அம்மா நாங்கள் வி.பி.க்குதான் ஓட்டு போட வேண்டும். இவர்களுக்கு அல்ல என்றான். வி.பி. ஒரு கணம் அச்சிறுவனைப் பார்த்து தம்பி உங்களுக்கு வி.பி.யை தெரியுமா? சிறுவன் தெரியாது என தலையை ஆட்டினான். தாயார் சிரித்தார். வி.பி. குழு அச்சிறுவனிடம் இவர்தான் தம்பி வி.பி. என்றனர். அவன் தன்தாயை

**தொடர்ச்சி....7 ஆம் பக்கம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சாதிகள் உள்ளவரைகுறைகளைவிளக்க சாதி மாநாடுகள் தேவையே.

இப்படிபட்ட மாநாடுகள் மூலமே தங்கள் குறைபாடுகளை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டலாம் இப்படிச் சாதியின் பேரால் மாநாடுகள் கூட்டலாமா என்பது ஒரு பெரிய பிரச்சனை. இப்படிக் கூடாது என்பவர்கள் சாதியின் பேரால் பிழைப்பவர்களேயாவார்கள்.

நமது கொடுமைகளை எல்லாம் கொடுமையினை அனுபவிக்கும் சாதியார்களாகிய நாம் மாநாடுகள் கூட்டித்தான் சிந்தித்து அரசாங்கத்துக்கு உணர்த்த முடியும். இப்படிப்பட்ட சாதி மாநாடு கூடாது என்பது எல்லாம் சுத்த புரட்டு. ஒவ்வொருசாதியாரும் மாநாடு கூட்டி தங்கள் குறைபாடுகளை எல்லாம் எடுத்து அரசாங்கத்துக்குச் சொல்லவேண்டும்.



என்னைச் சாதி மாநாடுகளுக்குக் கூப்பிட்டால் போவேன் கடைசியில் பேசிவிட்டு «சாதி ஒழியவேண்டும் சாதியின் காரணமாக ஒருவன் உயர்ந்தவன் ஒருவன் தாழ்ந்தவன் என்ற கொடுமைகள் ஒழியவேண்டும்» என்று கூறுவேன்

(பெரியார்-11-06-1951)

# அரேபியக் குழந்தை

திருவிழாக்காலத்தில்
அம்மாளின் முற்றத்தில்
அடிக்கடி புதுமை நடக்கும்
தீட்டுப்பட்டவர்
அருகில் சென்றால் சினம்கொள்வாள்
தீட்டோடு துலாஇழுத்தால்
மறுநாள் காலை
வாளி எங்கோ மறைந்து விடும்
தீட்டோடு குளித்தாலோ குடித்தாலோ
கிணற்றின் அடியில்
நெடில் வீசும்
ஒரு தீர்த்தத்திருநாளில்
தாகத்தில் நா வறள
குறுக்குக்கட்டோடு
சும்மாடு தலையில் ஏற்றி
குடத்தோடு
அம்மனின் முற்றத்தில்
நல்லதண்ணீர் அள்ள
துலாவைத் தாழ்த்தி
பின் மேல் நோக்கி இழுக்க
என்ன அதிசயம்!
வாளியுள்
அரேபியக்குழந்தை
நீந்தியபடி!
பிறப்பிலிருந்து
நல்லம்மாள் தீட்டுப்பட்டிருந்தாள்.

**ம.புதுமைலோலன்**

(கடந்த “வடு-03” இதழில் இக்கவிதையின் பிரசுரிப்பில் ஏற்பட்ட தவறுதல் காரணமாக இக்கவிதை மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.)

www.tamilarangam.net

# எம்.சி.சுப்பிரமணியம் ஒரு சமூகவிடுதலைப் போராளி

**தோழர் எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள் 27-09-1917 இல் பிறந்து தனது இளம்வயது முதல் இறுதி மூச்சுவரை ஒடுக்கப்பட்ட சமூகத்தின் விடுதலைக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். சிறுபான்மை தமிழர் மகாசபையின் தலைவராக நீண்டகாலம் செயற்பட்டும் வந்தவர். இவர் இன்றும் தலித் சமூக மக்கள் மனங்களில் வாழ்ந்துகொண்டு இருக்கிறார். தலித் சமூகப் போராளியும் எழுத்தாளருமான டொமினிக் ஜீவா அவர்கள் ' இரண்டெழுத்தில் இயங்கி வந்த இணையற்ற செயல்வீரன் எனும் எம்.சி. அவர்களின் நினைவுத் தொகுப்பிற்கு எழுதிய கட்டுரையில் இருந்து நன்றியுடன் ஒரு பகுதி.**



## தோழமைக்குரிய உண்மையான தொண்டன்.

தலையில் தரித்த கதர்க்குல்லாவுடனும், கதர் உடையுடன் கூடிய தோற்றத்துடனும் அந்தக் காலத்தில் யாழ்ப்பாண நகரத்தின் பிரதான வீதிகளில் ஒருவர் சைக்கிளில் வலம்வந்துகொண்டிருந்ததை அவதானித்து வந்துள்ளேன்.

நானோ வளரிளம் பருவத்து இளைஞன். அவரைப் பற்றி உருவத்தில் தெரிந்ததே தவிர மேற்கொண்டு விபரமேதும் அப்போதைக்கு தெரிந்திருக்கவில்லை. தெரிந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பமும் எனக்கு கிடைக்கவில்லை. பின்னர் இலக்கிய நண்பர்களான எஸ்.பொன்னுத்துரை, டானியல் ஆகியோரின் நட்புக் கிடைத்தது.

அந்தக் காலகட்டத்தில் கம்யுனிஸ்ட் கட்சியின் யாழ் மாநகர சபைத் தேர்தலுக்காக நான் வாழ்ந்து வந்த 14 ஆம் வட்டாரமான ஸ்ரேசன் வட்டாரத்தில் அபேட்சகராக நிறுத்தப்பட்டார். நானும் என்னைப் போன்றவர்களும் படு உற்சாகமாக வேலைசெய்தும் நாம் எதிர்பார்த்தது போலவே தோல்வி ஏற்பட்டது. தொடர்ந்து அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை எம்.சி. அவர்களின் தலைமையில் புதுத் துடிப்புடன் இயங்கிவரத் தொடங்கியது. நானும் டானியலும் மகாசபையுடன் இணைந்து செயல்படத் துவங்கினோம்.

தோழர் பொ.கந்தையா பருத்தித்துறைத் தொகுதியில் பாராளுமன்ற அங்கத்துவம் பெறுவதற்கு தோழர் எம்.சி.யின் கடும் உழைப்புடன் சேர்ந்து, எழுத்தாளர் டானியலும் மிகப்பெரிய பங்களித்தார். தோழர் எம்.சி.என்பது தனிமனிதரின் பெயரல்ல. அது ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலைக்கு பாடுபட்ட கூட்டுழைப்பு நண்பர்களின் குறியீட்டு நாமமாகும்.

பருத்தித் துறையில் ஒரு பிரச்சாரக் கூட்டத்திற்கு சென்றுவிட்டு நட்டுநடுச்சாமத்தில் யாழ்ப்பாணம் நோக்கி திரும்பிக்கொண்டிருந்தோம். வல்லைவெளியைக் கடந்துகொண்டிருந்தது நாம் பயணித்துக்கொண்டிருந்த வண்டி. அந்த வண்டிகூட மக்கள் அவரது சேவையை பாராட்டி அன்பளிப்பு செய்தது. திடீரென ஒரு சத்தத்துடன் கையெறிகுண்டு நமது வாகனத்தை நோக்கி வீசப்பட்டு பெரும் சத்தத்துடன் வெடித்தது. தோழர்கள் எம்.சி., வைத்திலிங்கம், அன்ரனி மாஸ்ரர், அத்த சிங்கள தினசரியின் ஆசிரியருமான எச்.ஜி.எஸ்.ரத்னவீர, நான் ஆகியோர் வண்டியில் இருந்து தூக்கி வீசப்பட்டோம். ஆனால் சிறு சிறு காயங்களுடன் அந்தப் பெரிய குண்டெறி வன்முறையில் இருந்து நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் தப்பித்துக்கொண்டோம். பெரிய அதிசயம் இது. சன சந்தடி அற்ற அந்த அத்துவான வெறிச்சொடிய வெளியில் நிமிர்ந்து நின்று கொண்டே ஆரடா அவன்! டேய் துணிச்சல் இருந்தா முன்னால் இருந்து செய்யுங்கோடா, ஒழிச்சு நின்டுகொண்டு குண்டெறியிறீங்களே இதுதானாடா உங்கட வீரம் எனக் குரல் கொடுத்தவர் நம்மவர். அவர்தான் எம்.சி.

அந்த அவல வாழ்வுடன் போராட்டம் நடாத்தி சாதிச் சனியன்களுடன் சமர்செய்து மறைந்த தோழர் எம்.சி.யுடன் சமகாலத்தில் நானும் ஒரு தோழனாக அவரால் கணிக்கப்பட்டேன் என்பதே எனக்கும் என் பின்சந்ததியினருக்கும் போதும் போதும்.

**எம்.சி.சுப்பிரமணியம் அவர்களின் 90 ஆவது பிறந்ததினத்தை "வடு" மரியாதையுடன் நினைவு கொள்கிறது.** ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

-பசுபதி-

«அட இந்த கொடிய காரியத்தைச் செய்துட்டுப் போனாளே நாத்த உறண்டச்சி... கோயிலுக்கினறு எண்டு பார்த்தாளா? இப்படியொரு ஈனங்கெட்ட வேலையைச் செய்ய எங்கே மனம் வந்துச்சு?»

கோபம் தலைக்கேற சுடு கலனாய்ச் சொல்லெடுத்து சுற்றிச் சுற்றி வளைய வந்தார் நடேசர்.

«அட விடுங்கண்ண இவன் மட்டுந்தானா இந்த ஊர். இல்லை இவனுக்கு மட்டும்தான் சமத்துவம் தெரியுமா? நாலு பேரோட கூடிக்கதைச்சு நல்லது கெட்டது கேட்டிருக்கலாமில்லே»

தோளில் கிடக்கும் துண்டை மாத்தி மாத்திப் போட்டபடி கர்ண கடூராமாய் கதையளந்தார் கந்தையா விதானையார்... கரை புரண்டோடும் சாதிவெறியின் சாட்சியக்கரராய்.

தாழ்த்தப்பட்ட இந்தச் சண்டாளச் சிறுக்கி கோயிலு திருமஞ்சணக் கிணத்தில பட்டை போட்டுட்டாளாம். ஊருக் குள்ள காட்டுத் தீயாய் பரவிக்கொண்டிருக்கும் அதிர்ச்சிச் செய்தியை கேட்ட பெரிய வீட்டு நாச்சியார்கள் கண்களில் பொங்கி வரும் கோபத்தோடு கையில எடுத்த குடங்களை ஆங்காங்கே போட்டுவிட்டு பொலிவிழந்து போய் நாடிகளில் கைகளை ஊன்றியவாறு குசு குசுப்பும் மச மசப்புமாய் விசனம் பேச! கடந்து கொண்டிருந்தது அந்த அதிகாலை வேளை.

«ஏண்டா டேய் கனகா அவனை ஒருக்கால் ஓடிப்போய் வரச்சொல்லு புதுமையையும் புரட்சியையும் ஊருக்கே காட்டித் தந்துட்டு பொட்டையள் மாதிரி வீட்டுக்குள்ள போய் பதுங்கிட்டான். கெதியாய் வரச்சொல்லு. அந்த கெட்டிக்கார குட்டித்தம்பியை..» எனக் குரல் கொடுத்தார் கந்தையா விதானையார்.

பெட்டிக்குள் உறங்கிக்கிடந்த சாதித் திமிர் சமய சந்தர்ப்பம் கிடைச்சபோது இறக்கை கட்டி இரு குதிரைப் பாச்சலில் எழுந்தோடுகிறது.

«குட்டி நாய் குலைச்சு பட்டி நாய்க்கு கேடு வந்த கதையாய் எங்களுக்கும் இப்பதானே ஐயா தெரியும் இந்த கோதாரிப் போவார் 'துவனிய... காலா காலமாய் நீங்க வந்து தண்ணி எடுத்துத்தந்து, நீங்க போட்ட சோத்தை சாப்பிட்டுத்தானே வாழுறம் அதுக்குள்ள எப்படி ஐயா வரும் எங்களுக்கு இந்த தைரியம் இரண்டெழுத்தைப் படிச்சிட்டா பூமி பூலோகம் ஒன்றும் புரியுதில்ல பாருங்கோ. அற்பனுக அடியுண்ணிக்.» அவர்களின் உப்பை தின்று வாழ்ந்த ஊதுகுழல்களின் ஒத்துதல்கள்.

«ஐயா என்ர புள்ளையை ஒண்டுஞ் செய்து போடாதேங்கோ சின்னஞ் சிறுசு தெரியாம செஞ்சிட்டுது.»

அழுது வீங்கிய முகத்தோடு நாச்சிமுத்தன் ஊரில ஒவ்வோர் சாதி ஜம்பவான்களின் கால்களிலும் விழுந்து கொண்டிருந்தார்.

«உங்கடை மச்சான் பிள்ளைதான் ஐயா இதுகளையெல்லாம் தூண்டிவிட்டு ஏவி விடுறார். இதுகளுக்கு ஏதும் தெரியாதையா.» மீண்டும் அழுகிறார் நாச்சிமுத்தர்.

அந்த நன்நீர் கிணற்றைச் சுற்றி சாதிக் கரகங்கள் புடைசூழ்ந்து பொங்கி எழுகின்றன. இவற்றையெல்லாம் கூட்டத்தோடு கூட்டமாய் பார்த்துக் கொண்டு நிற்கும் கண்ணனுக்கு என்ன செய்வது ஏது செய்வது என்று புரிய வில்லை. என்ன ஆகுமோ என்ற பயத்தால் அவன் மனம் பதறியது. நேற்று நடந்த வாலிப முன்னணிப் பொதுக் கூட்டத்தில் அவன் எவ்வளவோ சொல்லித் தடுத்தும் முடியாமல் போச்சு. வாலிபமுன்னணி தமக்கான புகழ் சேர்க்கும் நடவடிக்கையாக இது இருக்குமோ என்று நினைத்து அவன் அதைத் தடுத்தான்.

«நாம் புரட்சிக் குரியவர்களாக இருக்கலாம் அதை போராட்டமாக, தமக்குரிய தேவையாக பாதிக்கப்பட்டவர்களும் எதிர்கொண்டால்தானே எதுக்கும் வெற்றி»
என்ற கண்ணனின் கூற்றை இழிவு செய்த இளைஞர்கள், «மனித உரிமையை மதிப்பதொழிய இது புரட்சியோ போராட்டமோ அல்ல» என்றது கொஞ்சம் சிறு புள்ளைத்தனம் போலும் பட்டது. காலா காலமாக 'கைமண்டையிலும்' 'சிரட்டைகளிலும்' குடித்துக் கொண்டு யாராவது வந்து தண்ணி அள்ளித் தரும்வரை பானைகளை வைத்து காவல் காத்துக்கொண்டிருக்கினம். அப்போது வழியால் போகும் குடிகார வெறிகாரன் குமர் குந்தாணிகளை பார்க்கிற பார்வை சரியில்லை. அதுக்காக ஊருக்கு ஒதுக்கு புறமாய் ஒரு நல்ல தண்ணிக்




கிணற்றை ஒதுக்கித்தந்தால் நல்லது என்றுதான் கண்ணன் வாலிப முன்னணியைக் கேட்டிருந்தான்.
அதற்கு வாலிபமுன்னணித் தலைவரான ரங்கன்..

«இஞ்சை பாருங்கோ கண்ணன் அப்படி நாங்கள் செய்தால் நாங்களும் காலாகாலமாய் இருந்து வருகின்ற வர்ணாச்சிரம முறைகளையும் சாதிக்கு பயந்த வாரிசுகளாகவும் தான் உணர முடியும், அதனால என்ன வந்தாலும் உங்களில துணிச்சல் மிக்க ஒருவரை வைச்சு தண்ணி அள்ளிக் காட்டுவம்.» என்ன அப்படித்தானே என்று சபையைப் பார்த்துக் கேட்க அவன் தோழர்கள் உணர்ச்சிகரமாக ஆரவாரஞ் செய்தனர்.
«என்ன கண்ணன் நீங்க பயப்படுற மாதிரி தெரியுது மாறும், மாறும் என்று இருக்ககூடாது. மாற்றவேண்டும். ம்...ம்...காலம் பதில் சொல்லும், கோலம் பதில் சொல்லுமென்றால் எப்படி..! குட்ட குட்ட குனியிறவனும் மடையன்.» என்றான் ரங்கன்.

«அடுத்தது தெரியுந்தானே» ஒருவித உச்சாகமூட்டல்..

www.tamilarangam.net

# தேசத்திற்கும் அப்பால்

ராமீகன்

**தா**ழ்த்தப்பட்டோர் கேள்விகளுள் எனக்கு அதிர்ச்சி தருவது எவ்வாறு இது தேசத்திற்கு அப்பாலும் ஓர் கேள்வியாக இன்றும் இருப்பதே. உபகண்ட இனங்கள் மனிதப்பிரிவை எங்கும் காவிச்செல்வதை ஓர் கலாசாரமாகக் கொண்டுள்ளது என்பதோடு ஒட்டிக்கொண்டதே இந்தக் கேள்வி. இதற்கு புகலிடத் தமிழர் வாழ்வியலிற்குள் நாம் நிறையச்சாட்சியங்களைக் காணலாம். ஓர் அறிவியல் எழுச்சி புகலிடத் தமிழர்களது முதலாவது கேள்வியாக இல்லாது போனது ஏன்?

புகலிடத்தில் இன்றும் தலித் கேள்வி ஓர் தாழ்த்தப்பட்ட கருத்தியலாகவே உள்ளது. உள்ளே ஒன்று வெளியே ஒன்று என்பதை இன்றும் வாழ்வதே எங்கள் புகலிடம். தமிழர் சமூகச் சூழல் ஓர் மாற்றத்தை அங்கீகரிக்கத் தயாராக இல்லை என்பது தவறா. அதற்கு அங்கீகரிக்கும் மனப் பக்குவம் இருந்தால் தலித் கேள்வி வேறு பரிணாமத்தை இன்று பெற்றிருக்கலாம்.

தேசத்திற்கு அப்பால் நாம் தேரைக் கொண்டுவந்து தேசத்தின் அடிப்படைப் பிரச்சனைகளைக் கொண்டுவராது விட்டது ஏனாம்? இன்று எங்களை விழுங்கிக் கொண்டிருப்பது தேசக் கரிசனையல்ல, தேர்க் கரிசனையே. இது இந்துத்துவத்தை அகதியின் ஓர் முகமாகக் காட்டும் எத்தனமே.

vqf s; Nj rk; gy f yhrhuqf i sf; nf hz ; J. mi dj ;J f; f yhrhuj ;J s S k; ml f FKi wf s; c s s d. Xh; gdi ; k t hrgNg ehk; Nj rj j pwF mgghy ;, Ue;J k; Nj rj j pd ;neUf f bahd Nf s t; f s pwFj ; J }uj j py ;, yi y vd gi j f; f hl Lt j wf hd xNu xU ghi j .

q

5ஆம் பக்கத் தொடர்ச்சி

«அதுசரி உங்கட வீடுகள் ஓட்டுக்கூரை எங்களுன்ரை வீடுகளுக்கு ஓலைக்கூரை விரைவில் தீப்பிடிக்கும். பிறகு ஏழை எளியதுகளின்ர வயித்தெரிச்சல் எதற்கு» என்று தயங்கினான் கண்ணன்.
«உம்மோட இனிப் பேசி சரிவராது..» அப்படியே மௌனமானார்கள்.
கண்ணன் உத்தியோகத்திற்கு போன நேரம் பார்த்து தீரமுள்ள ஒரு ஹரிசனப் பெண்ணை வைத்து கோயில் திருமஞ்சணக் கிணற்றில் தண்ணியை அதிகாலையிலேயே அள்ளி விட்டனர் வாலிபமுன்னணியினர்.
அதைப் பார்த்துவிட்ட ஒரு வர்ணாச்சிரமத்தின் வாரிசு ஊரையே தண்டோரா போட்டு அழைத்து விட்டது. கிணற்றை சுற்றி நின்றவர்கள் தம் தம் அபிப்பிராயங்களை அள்ளி வழங்கிக் கொண்டிருக்க ரங்கனின் வீடு நோக்கு ஓடிய கனகு, ரங்கனை அவசர அவசியமாகக் கூப்பிட்டு அங்கே நடந்து கொண்டிருக்கின்ற ஊர்க் குழப்பத்தை எடுத்துக்கூற.. அதை அவன் எதிர்பார்த்திருந்ததுபோல் தொங்குகின்ற தன் காற்சட்டை சேட்டை எடுத்து கோர்த்துக் கொண்டு சம்பவ இடம் நோக்கி நடந்து வந்தான். ரங்கன் எதையும் அறியாதது போல் ராஜ நடை போட்டு வருவதைக் கண்டவர்கள் ஆள் ஆளுக்கு வாய்க்கு வந்தமாதிரி வார்த்தை ஜாலங்களை கணக்கின்றி வீசினர்... அவன் மேல் அசட்டுப் பார்வையொன்றை வீசியபடி.

«இவனுக்கு சமத்துவம் வேண்டுமென்றால் இவன் வீட்டில் இருக்கிறதில் ஒன்றை கலியாணம் கட்டிக் கொடுக்க வேணும் இல்லை இவன் போய் கீழ்சாதிக்கார வீட்டில் கலியாணம் செய்யட்டும் அதைவிட்டு எப்படி ஊர்ப்பொதுச் சொத்திலயே இவர் கீழ்ச் சாதியை கைவைக்கச் சொல்லமுடியும்?» என கூட்டத்திலிருந்து வெளியேறியது குரல் ஒன்று.

அதைக்கேட்ட ரங்கன் சற்றும் உணர்ச்சிவசப்படாது. «உங்க நியா தர்மம் எதையும் நான் கேட்க வரேல்ல. அவர்களும் மனிதர்கள் அவர்கள் வாழப்பிறந்த உரிமையை பறிப்பது தவறு. அவங்களும் மனிசர்கள் அவ்வளவுதான;»

«இஞ்சைபார் உமக்குத்தான் கனக்க தெரியும் எண்டு நடக்கக்கூடாது. அதுகளே அதை வேணாம் எங்கேக்கை நீர் எதுக்கு வரிஞ்சு கட்டிக்கொண்டு» சின்னத்தம்பியர் முடிச்சுப்போட்டு நிற்க!
«அதுதான் புதிய பரம்பரைக்கு உச்சாகமூட்டினேன்» என்றான் ரங்கன் சர்வசாதாரணமாக. இந்தவார்த்தைகளை காதில் வாங்கிய நடேசர்..
«கொண்டுவாருங்கோடா வண்டி வண்டியாய் கல்லையும், மண்ணையும் கிணத்தை மூடுவம். அதுக்குப் பிறகு இவன் எங்க வைச்சு சமத்துவம் நிலை நாட்டுகிறான் பார்ப்பம்» என்றார் திமிராக.
அதற்காகத்தான் காத்திருந்ததுபோல் உற்சாகமாக தொழிற்பட்டு, கிணற்றுக்குள் மண்ணையும், கல்லையும் போட்டு நிரப்பினர்.
«கடவுளுக்கு தண்ணி எடுத்துப் பூசை பண்ணுற இந்தப் பணியில தீண்டத்தகாத சிறுக்கி கை வைச்சிட்டாள் இதுக்கு இண்டைக்கு முற்றுப் புள்ளி வைப்பம்.» என்றவரை ஒருவித கேலிப்புன்னகையைத் தவழ விட

«,துவும் நல்லதுதான் பாகுபாடு காட்டுகின்ற எந்த வடிவமும் மூடப்படட்டும்»
vன்றான் ரங்கன் தன்னை சுதாகரித்துக் கொண்டு.
ஊரின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஈடுகொடுத்து நிற்கும் அவனைத் தேற்ற மெல்ல வந்த கண்ணன்...

பார்த்தீங்களா நான் சொல்...சொல்ல நீங்க எடுத்த நடவடிக்கை என்று பயந்து நின்ற அவனை
பயந்தால் எப்படி பிரச்சனைக்கு வழி, நாம கட்டிக் காத்துவரும்

**8ஆம் பக்கம் பார்க்க....**

www.tamilarangam.net

# கேள்வித் துணைகள்

**செல்வராசா - சுவிஸ்**

**கேள்வி:**

***தங்கள் பத்திரிகை கிடைத்தது நன்றி. இன்னும் அதிகளவில் பக்கங்களைக் கூட்டியும் கட்டுரைகளின் கனதியை அதிகரித்தும் பத்திரிகைத் தரத்தினைக் கூட்டலாம் என்று கருதுகிறேன். இது பற்றிய உங்கள் எண்ணத்தினை தயவுசெய்து தெரிவிக்கவும்?***

**பதில்:**

உங்களின் மேலான அக்கறைக்கு நன்றி.

**வடு** தரத்தினில் மேலோங்க வேண்டும் என்பது எல்லோரினதும் அவா! ஆவன செய்கிறோம். பக்கங்களை அதிகரித்தல் என்பது எமது எண்ணமும் கூட. ஆனால் அது உடனடிச் சாத்திமா என்பதினை உறுதி கூற முடியவில்லை. உங்களைப் போன்றவர்களது தொடர்ச்சியான ஆதரவுகள் எமக்கிருப்பின் அது எதிர்காலத்தில் நிறைவேற்றலாம் என்பது எம் எண்ணம். மேலும் கட்டுரைகளின் கனதி பற்றியும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதிலே இரு வேறுவிதமான அபிப்பிராயங்கள் ஒரு சேர வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் எளிமைப் படுத்தவேண்டும் என்பது ஒரு கருத்து. நீங்கள் கூறியதைப்போல கனதியை அதிகரிக்க வேண்டும் என்பது இன்னுமொரு கருத்து. எம்மைப்பொறுத்தவரையில் இவ்விரு வேண்டுகோளுமே நியாயமானதுதான். ஒவ்வொரு கட்டுரைகளினதும் உள்ளடக்கம்தான் அதனது கனதியை தீர்மானிக்கும் என்பது உண்மை. ஒவ்வொரு விடயங்களுமே அவை தம்மை வெளிப்படுத்தத் தூண்டும் போதே தமக்கான வடிவங்களையும் அதனது கனதியையும் தீர்மானித்துக்கொண்டு விடுகின்றன. இதனைத் தவிர்த்து சில கடினமான விடயங்களை கீழிறக்கி எளிமைப்படுத்தி விடவும் முடியாது. சில எளிமையான விடயங்களை வேண்டும் என்றே கடினமாக்கி சொல்வித்தை காட்டுவது வெத்துவேட்டாக அமையும். எனினும் விடயதானங்கள் அனைத்தும் மக்கள் அனைவரையும் சென்று சேரக்கூடிய வகையில் ஆக்கங்கள் அமையும் என்பதை தங்களுக்கு உறுதியாகக் கூறுகின்றோம்.

**பாலகுமார் - கனடா**

**கேள்வி:**

***தலித்தியம் என்பது இந்திய சூழலுக்கு பொருத்தமானது என்பதே சரி. இதனை விடுத்து இலங்கையின் சாதி அமைப்பிற்கு இது பொருந்தாது என்பது எனது அப்பிப்பிராயம். இது பற்றிய வடுவின் கருத்தினைத் தரமுடியுமா?***

**பதில்:**

மேலோட்டமாக இக்கேள்வி அனேக இடத்தில் இருக்கிறது. அக்கறையோடு கேட்கப்படும் இக்கேள்வியின் இன்னுமொரு பக்கம் இதற்கெதிரான நிலையினையினையும் எடுக்கிறது. அதாவது: இலங்கையில் சாதிப்பிரச்சனை இல்லையென மறுதலிப்பது, இந்திய அளவோடு ஒப்பீடு செய்து சாதிப்பிரச்சனை இலங்கையில் மிகக் குறைவு, அல்லது அதுவெல்லாம் இப்ப பொருட்படுத்தக் கூடியதொன்றல்ல எனக்கூறி அலட்சியப் படுத்திவிடுவது. உண்மையில் உலகத்தில் அனைத்து மக்களுக்குமான பொதுக்கோட்பாடு இதுவென எதையும் எவரும் முன்வைக்கவில்லை. மதவாதிகள் வைபிளையும், குர்ரானையும், வேதங்களையும் அனைத்துக்குமான சர்வ நிவாரணியாக தூக்கிப்பிடிப்பது போல நாம் எதையும் எம்தளத்தில் இறுக்கமாக கொண்டிருக்கவில்லை. ஆனால் பொதுவாக உலகெங்கும் உள்ள உழைக்கும் மற்றும் ஒடுக்கப்படும் அனைத்து மக்களுக்குமான எத்தனையோ தத்துவங்களும் அதன் சாரம்சங்களும் ஒவ்வொரு நாட்டிலும் அதனதன் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வாதிக்கப்படுகிறது, வளக்கப்படுகிறது, பரிசோதித்துப் பார்க்கப்படுகிறது. மாக்சிசத்தினது தோற்றம் அதன் நீட்சி அதன் வளர்ச்சி என்பனவும், அதன் சாத்தியம் அசாத்தியம் எனவும் வரலாறுகள் நிறைய உண்டு.

எனினும் இன, நிற, சாதிய, வர்க்கம் என்று எந்தவகையிலும் எங்கெல்லாம் மக்கள் ஒடுக்கப்படுகின்றார்களோ அங்கெல்லாம் அவற்றுக்கு பொருத்தமான தத்துவங்களை அதனது சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பொருத்தி அதன் சாத்தியப்பாடுகளை கண்டெறிந்து அதனை வளர்த்துச் செல்வதில் தவறு ஏதும் இல்லை. எனவே இத்தத்துவம் எமது நாட்டுக்கு பொருத்தமா இல்லையா என்பதை விடுத்து, அதனதன் தேவையான அம்சங்களோடு பொருந்திப்போகும் எம்நிலமைகளை கருத்தில் கொண்டு பிரச்சனைகளுக்கான தீர்வை நோக்கிச் செல்வதுதான் எம் நிலைப்பாடு.

❑

---

**2 ஆம் பக்கத் தொடர்ச்சி......**

கட்டிப்பிடித்து சிரிக்க தொடங்கினான். வி.பி. என்ற இரண்டு எழுத்து சொல் அச்சிறுவனை கவர்ந்தது. வி.பி. அக்குடும்பத்தின் ஆதரவை உறுதிப்படுத்திக்கொண்டார். அச்சிறுவனே அச்சாம்பி என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்ற அச்சாதம்பி செல்வராசா. சண்டிலிப்பாயில் இருக்கிறார்.

வி.பி.யின் பாராளுமன்ற தேர்தல் பிரசார கூட்டம் சண்டிலிப்பாய் மடத்தடி புத்தகம்புலவு மைதானத்தில் நடைபெற்ற போது என்னை என் தந்தை கூட்டி சென்றதும் அங்கு வி.பி. அவர்கள் தன் காந்தசக்தியான பேச்சின் இடையில் நன்னியை பொன்னியை (தலித்துக்களின் பெயர்) நாச்சியார் என்கின்ற காலம் வெகுதூரமில்லை. தமிழ் சாதிகளிடம் இருக்கும் சாதி தீண்டாமைக் கொடுமையை கம்யுனிஸ்டுகள் ஒழித்து சமத்துவ சமதர்மத்தை ஏற்படுத்துவோம் என்று ஆக்ரோசமாக பேசும் போது பலத்த வரவேற்பும் பின் தலித் வாலிபர்கள் வி.பி. யை தோழில் சுமந்து கார் வரை கொண்டு சென்றதும் பசுமையான நினைவாக இருக்கின்றது.

**தொடரும்.....** **ந**

www.tamilarangam.net

# நண்பர்களோடு நானும் ஊர்க்கதை

**சா**திகள் அழிந்துவரும் நிலையில் தலித் எனும் அமைப்பின் பெயரால் பத்திரிகை நடாத்தி சாதி அவலங்கள் பற்றிப் பேசி வருவது தலித்துகள் சிலர் தங்களுக்கு அவமானமாகவும் அருவருப்பாகவும் இருப்பதாக கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

தண்ணீருக்குள் இருந்துகொண்டு தண்ணீரைத் தேடுவதைப்போல, இன்றைய தமிழ் கலாசார வாழ்க்கைமுறைக்குள் வாழ்ந்துகொண்டு சாதிகள் அழிந்துவிட்டதென கூறுவது அல்லது உணருவது நாம் எங்களையே ஏமாற்றும் முயற்சியாகும். உணவுவிடுதிகளிலும் கலாசார நிகழ்வுகளிலும் ஒன்றாக இருந்து உணவு அருந்துவதனால் சாதிகள் இல்லை என எண்ணிவிட முடியாது. மேலாதிக்க சமூகத்தினரால் நடாத்தப்படுகின்ற ஊடகங்கள் அல்லது மேடைகளில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில தலித்துக்களுக்கு இடம் கிடைப்பதனால் சாதி அழிந்துவிட்டதெனவும் எண்ணிவிடமுடியாது. மாறாக தமிழர்களால் இன்று கடைப்பிடிக்கப்பட்டுவரும் கலாசாரம் எனும் வர்ணாச்சிரம கோட்பாட்டு வழிமுறையை கட்டிக்காப்பாற்ற வேண்டும் என துடிப்பவர்களும், அக்கோட்பாடு அழிந்துவிடக்கூடாது என அடம்பிடிப்பவர்களும், தமிழ்த் தேசியத்தின் பெயரால் அதை வளர்த்தெடுக்க முற்படுபவர்களும், தங்களது பொருளாதார, கல்வி, ஊடகம் என பல வளங்களையும் பயன்படுத்தி சத்தமில்லாமல் கலாச்சாரம் வளர்த்து வருபவர்களுமே சாதியைக் காப்பாற்றும் செயற்பாட்டாளர்களாக இருந்து வருகின்றனர்.

இன்றைக்கு புலம்பெயர் நாடுகளில் செயற்பட்டுவரும் அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக்கழகங்கள், கலாச்சார அமைப்புக்கள், பழைய மாணவ சங்கங்கள் என அனைத்துமே அவரவர் சார்ந்த சாதிகளின் பெருமை கூறுபனவாகவே இருந்து வருகின்றது. இந்தநிலையில் புலம்பெயர் நாடுகளில் சாதிகள் அழிந்துவிட்டதெனக் கூறுவது மிகப்பெரிய புலுடாவாகும்.

தெருவிலே சந்திக்கின்ற போது நாம் எல்லோரும் தமிழர்கள் என பெருமையாகப் பேசிக்கொண்டாலும் ஒவ்வொருவரும் தத்தம் வீட்டுக்கதவுகளைத் திறந்து உள்ளே போகும்போது அந்தந்தச் சாதிகளாகவே உள்ளே நுழைகின்றனர். எனவே வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தலித் மக்களில் பெரும்பான்மையானோர் இன்னும் துன்பத்துடனும் துயரத்துடனும் இலங்கையில் வாழ்ந்துவருகின்றனர். அவர்கள் துயர் துடைக்க எம்மாலான பங்களிப்பைச் செய்வது மிகப்பெரிய கடமையாகும். எனவே நாம் இங்கும், எங்கும் தலித்துக்கள் என உரக்கச் சொல்வதில் மேலதிகமாக ஒன்றும் தாழ்ந்துவிடமாட்டோம்.

ந

### 6ஆம் பக்கத் தொடர்ச்சி.....

இந்தப் பாறாங்கல்லை அப்படியே விட்டா எப்படி... தூக்கி தூர வீசவேண்டாம்?

சற்று உணர்ச்சி மேலோங்க உற்சாகமாக தட்டிக் கொடுத்தான். எப்படி நாம் சாதிக்கெதிராக செயற்பட்டாலும் அது முளையிலே கிள்ளப்படும் போல.

இவ்வளவு காலமும் உயர்வடிவம் பெற்று திருமஞ்சணக் கிணறாக காட்சி தந்தது இனிமேல் தெருப்பூஞ்சணக் கிணறு என்று அழைக்கப்படும்போல என்று கண்ணன் சொல்ல கலவரத்தையும் பொருட்படுத்தாது இருவரும் சிரித்தனர்..

❑


## “தலித்மாநாடு”

**எதிர்வரும் ஒக்டோபர் 20, 21 ஆகிய தினங்களில் தலித் மகாநாடு இடம்பெறவுள்ளது. பிரான்சில் நடைபெறவுள்ள இம்மகாநாட்டிற்காக இந்தியா, இலங்கை, கனடா, அவுஸ்ரேலியா, மற்றும் ஐரோப்பாவின் பல பாகங்களில் இருந்தும் பேராளர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள விரும்புவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.**

**தேவதாசன்: 0661803690, நாதன்: 0660368804** - E-MAIL:VADU.WORLD@hotmail.fr